
# 1 மனோரம்மியமான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வர்

## 1.1 மனோரம்மியமான வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு குடும்பத்தின் பங்களிப்பை ஆராய்வர்

### குடும்பம்

மனித சமூகத்திலுள்ள பழமை வாய்ந்த சமூகக் கட்டமைப்பு குடும்பமாகும். குடும்பம் என்னும் கட்டமைப்பு எங்கு, எப்போது உருவானது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆயினும், மனிதன் இப்பூவுலகில் மனிதன் தோன்றிய காலம் தொடக்கம் ஏதோவொரு வகையிலான குடும்பப் பிரிவு ஒன்றில் அவன் வாழ்ந்திருப்பான் என்பதை உறுதியாகக் கூறலாம். எப்படியாயினும் ஆரம்ப கால எளிமையான சமூக அமைப்பிலும் நவீன சிக்கலான சமூக அமைப்பிலும் குடும்பம் என்னும் அலகை நாம் காணலாம்.



உரு. 1.1 ஆதிவாசியின் குடும்பம்

குடும்பக் கட்டமைப்பு பற்றிய தெளிவான ஒரு கருத்தைப் பெற்றுக் கொள்வதற்காகப் பல்வேறு சமூக விஞ்ஞானிகளின் கருத்துகளைப் பற்றி நாம் அறிந்துகொள்வது உசிதமானது.

குடும்பம் என்பது "பொருளாதார ரீதியாகவும் குழந்தைகளை வளர்த்தெடுப்பதிலும் ஒற்றுமையாகச் செயல்படும் வீடாகும். இங்கு விவாகம் செய்த தம்பதியர் அல்லது வயது நிரம்பிய உறவினர்கள் வாழ்கின்றனர்" என்பது கதலின் கப் (Kathleen Gouh) என்னும் மானிடவியல் அறிஞரின் கருத்தாகும்.

இதன்படி,

- கணவன் மனைவி தம்பதியாக வாழ்வதும்
- அவர்களுக்குப் பிள்ளைகள் இருப்பதும்

குடும்பம் ஒன்றை இனங்காண்பதில் முக்கியமானது என்பது தெளிவாகின்றது.


இங்கு குடும்பம் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள இன்னுமொரு கருத்தையும் கவனத்திற் கொள்வது முக்கியமாகும். ஹொக், பவளொசி ஆகியோர்களின் கருத்துப்படி குடும்பம் என்பது

"வாழ்வதற்கு அவசியமான இடம், அடிப்படை வசதிகள், வளங்கள் என்பவற்றை பங்கீட்டுக் கொண்டு, நீண்ட கால ஒரே இலக்கை நோக்கிச் செல்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஒவ்வொருவரிடையேயும் செல்வாக்கை ஏற்படுத்தும் நபர்களின் கூட்டுச் சேர்க்கையாகும்.

மனித சமூகத்தின் அடித்தளம் குடும்பமாகும். சமூக வேறுபாடுகளுக்கிடையே குடும்பத்தின் தன்மைகளும் அமைப்புகளும் வேறுபட்டுக் காணப்பட்ட போதிலும் குடும்பங்கள் இல்லாத சமூகங்கள் அமைய முடியாது. சாதாரண சமூகங்களின் குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்கள் ஒரே வீட்டில் வாழ்வதைக் காணலாம். சிக்கலான சமூக அமைப்பில் குடும்ப அங்கத்தவர்கள் தனித்தனியாக வாழ்வதையும் காணலாம்.

**செயற்பாடு - 1**

குடும்பம் என்னும் சொல்லைச் செவிமடுக்கும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் குடும்ப அங்கத்தவர்களின் பெயர்களை எழுதுக.




உரு 1.2
சமூகத்தின் சிறிய அலகு குடும்பம்

## கருக் குடும்பம் (Nuclear Family)

கருக் குடும்பம் ஆணும் பெண்ணும் விவாகம் செய்து கொள்வதன் மூலம் உருவாகின்றது. குடும்ப வகைகளுள் மிகவும் எளியமையானது இதுவாகும்.



உரு 1.3
கருக் குடும்பம்

**கருக் குடும்பம் ஒன்றின் தன்மைகள்:**

- கணவனும் மனைவியும் பிள்ளைகளும் மாத்திரம் காணப்படுவார்கள்.
- சுதந்திரத் தன்மை அதிகம்.
- தனித்துவம் அதிகம்.
- குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பான உணர்வுகள் அதிகம் காணப்படும்.
- அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் அங்கத்தவர்களின் வேலைப் பொறுப்புகள் பெரும்பாலும் குறைவாகக் காணப்படும்.
- கணவன் அல்லது மனைவியின் இறப்பு அல்லது விவாகரத்து ஏற்பட்டால் குடும்ப அமைப்பில் பிளவு ஏற்படும்.

கணவன், மனைவி அவர்களுக்குப் பிறந்த அல்லது தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் அடங்கிய அலகு கருக் குடும்பமாகும் என்று ஜீ.பீ. மர்டோக் (G.P. Murdock) என்பவர் கூறுகின்றார்.

இன்றைய சமூகத்தில் அதிகமாகக் காணப்படும் குடும்ப அலகு இக்கருக்குடும்பமாகும். இலங்கையின் தற்கால சமூகத்திலும் அதிகமாகக் காணப்படும் குடும்ப முறை இந்த கருக் குடும்ப முறையாகும். கிராம வாசிகளிடையேயும் நகரவாசிகளிடையேயும் குடும்ப முறை அதிகமாகக் காணப்படுகின்றது.

கருக் குடும்பம் என்பது இரண்டு பரம்பரைகளின் ஒன்றிணைவு ஆகும். பெற்றோர்களும் பிள்ளைகளும் மட்டும் இதில் அடங்குவர். பெற்றோர்களின் மரணத்தின் பின்னர் அல்லது பிள்ளைகள் திருமணம் முடித்த பின்னர் அக்கருக் குடும்ப அமைப்பு பிளவுபடும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- ஆரம்பக் குடும்பம்
- தனிக் குடும்பம்
- உப குடும்பம்
- அடிப்படைக் குடும்பம்
- நெருங்கிய குடும்பம்

என்ற பெயர்களும் கருக் குடும்பத்தையே குறிக்கின்றன. குடும்ப அமைப்புகளுள் மிகவும் சிறியது கருக் குடும்பமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு வேறு குடும்பங்கள் ஏற்படலாம்.


**இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் பிற குடும்ப அலகுகளுடன் இணைந்த போதும் அவர்கள் அனைவரும் கருக்குடும்ப அங்கத்தவர்களாவர்.**

**ஒப்படை - 01**

கருக் குடும்பம் ஒன்று பற்றி நீங்கள் கருதும் சாதக பாதகமான கருத்துக்கள் யாவை? இது பற்றி ஓர் அட்டவணை தயாரிக்குக.

## கூட்டுக் குடும்பம் (Extended Family)

கூட்டுக் குடும்பத்தின் பிரதான தன்மை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பரம்பரையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒரே வீட்டில் வாழ்வதாகும். இது கருக் குடும்பத்தின் விரிவு காரணமாக ஏற்படும் குடும்ப முறையாகும்.



உரு 1.4
கூட்டுக் குடும்பம்

### கூட்டுக் குடும்பம் ஒன்றின் தன்மைகள்

- கணவன், மனைவி ஆகியோருடன் அவர்களது பிள்ளைகள், பாட்டி, பாட்டன், மாமா, மாமி, சிற்றப்பா, சிற்றன்னை ஆகியோரும் அவர்களது பிள்ளைகளும் இக்குடும்பத்தில் இருப்பர் (நெருங்கிய உறவினர்களும் இரத்த உறவினர்களும்).
- மூத்த உறுப்பினர்கள் பலர் இருப்பதன் காரணமாக அதிக பாதுகாப்புக் கிடைக்கின்றது.
- அங்கத்தவர் தொகை அதிகம் காரணமாகத் தனித்துவம் குறைவடைகின்றது.
- சுதந்திரம் குறைவடைகின்றது.
- உறவு முறை காரணமாக வேலைகளைப் பகிர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து அவற்றை மேற்கொள்வார்கள்.
- அதிகமானோரின் கருத்துகள் முன்வைக்கப்படுவதால் தீர்மானம் எடுப்பதில் சிரமம் ஏற்படும்.
- செலவு அதிகரித்துக் காணப்படும்.
- பல பரம்பரைகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதன் மூலம் அவர்களது கருத்துகளில் ஏற்படும் முரண்பாடு காரணமாக பரம்பரைகளுக்கிடையே கருத்து மோதல்கள் ஏற்படும்.
- கலாசார விழுமியங்களைப் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு செல்லவும், நல்லொழுக்க வளர்ச்சிக்கும் கூட்டுக் குடும்ப முறை அதிக வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றது.
- பிறர் நலம் பேணப்படுகின்றது.
- பொறுமை அதிகரிக்கின்றது.
- கொடுத்துதவும் தன்மையும் அதிகரிக்கின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

- விரிவடைந்த குடும்பம் • இணைந்த குடும்பம்
- ஒன்றிணைந்த குடும்பம் எனவும் கூட்டுக் குடும்பம் அழைக்கப்படும். கூட்டுக் குடும்பம் இந்தியாவில் இணைந்த குடும்பமாகக் கருதப்படும்.

**ஒப்படை - 02**

கூட்டுக் குடும்பம் பற்றி நீங்கள் கருதும் சாதகமான, பாதகமான கருத்துகளை அட்டவணைப்படுத்துக.

**செயற்பாடு - 2**

உங்கள் வகுப்பு மனைப் பொருளியல் மாணவர்களுக்கிடையில் பின்வரும் தலைப்புகளில் விவாதம் ஒன்றை நடாத்துக.

**வாதிகள்:** தற்கால சமூகத்தில் காணப்படும் ஒழுக்கச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்கு கருக்குடும்பம் பெரும் உந்து சக்தியாகும்.

**பிரதிவாதிகள்:** தற்கால சமூகத்தில் காணப்படும் ஒழுக்கச் சீர்கேட்டைத் தவிர்ப்பதற்கு கூட்டுக்குடும்பமே உந்து சக்தியாக அமைகிறது.

## குடும்ப அங்கத்தவர்களின் நடி பங்குகள்

குடும்பம் ஒன்றில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான நடி பங்கு உண்டு. நடிபங்கு என்பது ஒரு மனிதன் ஆற்றக்கூடிய செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு அவர் காட்டும் துலங்களாகும்.

ஒருவன் பிறப்பிலிருந்து இறப்பு வரையான காலப்பகுதியில் பல்வேறு வகையான நடிபங்கிற்கு உள்ளாவான். வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களையும் தாண்டும்போது சிறு குழந்தை, பிள்ளை, இளைஞன், நடுத்தர வயதான மனிதன், முதியோன் என்றவாறு பல்வேறு வகையான நடிபங்கிற்கு மனிதன் உட்படுகின்றான்.

குடும்ப அங்கத்தவர்களுக்குரிய நடிபங்கையும் வேலைகளையும் விளக்கும் போது குடும்பத்தின் வாழ்க்கைக் கட்டம் தொடர்பான விளக்கம் முக்கியமானதாகும்.

குடும்பம்
↓
ஆரம்ப கட்டம்
↓
வளர்ச்சிக் கட்டம்
↓
முதிர்ச்சிக் கட்டம்

### ஆரம்பக் கட்டம்

- ஒரு தம்பதி அவர்களுக்கிடையேயும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கிடையேயும் இசைவாக்கமடையும் கட்டம்.
- முதல் குழந்தை பிறப்பின் ஆரம்பக் கட்டம் நிறைவு பெறுகிறது.



உரு 1.5
புது மணத் தம்பதியினர்

**ஆரம்பக் கட்டத்தில் கணவனின் நடிபங்கு**


- தனது மனைவிக்குச் சிறந்ததோர் கணவனாக விளங்குதல்.
- இரு தரப்பு உறவினர்களுக்கும் சிறந்ததோர் உறவினராக விளங்குதல். இதன்படி நல்லதோர் மருமகனாக, சகோதரனாக, மைத்துனனாக, மகனாக விளங்குதல். இரு தரப்பினரின் நண்பர்களுக்கும் தோழியர்களுக்கும் சிறந்ததோர் நண்பனாக விளங்குதல்.

**ஆரம்ப கட்டத்தில் மனைவியின் நடி பங்கு**

- தனது கணவனுக்குச் சிறந்ததோர் மனைவியாக இருத்தல்.
- இரு தரப்பு உறவினர்களுக்கும் சிறந்ததோர் உறவினராக இருத்தல். இதன்படி சிறந்ததோர் மருமகளாக, சகோதரியாக, அண்ணியாக, மகளாக விளங்குதல்.
- இரு தரப்பினதும் நண்பர்களிடையே சிறந்ததோர் நண்பியாக விளங்குதல்

## வளர்ச்சிக் கட்டம்

முதல் குழந்தை பிறப்புடன் ஆரம்பமாகும் பிள்ளைகள் அனைவரும் திருமணம் முடித்து குடும்பத்திலிருந்து விலகிச் செல்லும் வரையான காலப்பகுதி வளர்ச்சிக் கட்டமாகும். (பிள்ளைகள் இல்லாத குடும்பத்தில் வளர்ச்சிக் கட்டம் காணப்படமாட்டது).




உரு 1.6 வளர்ச்சிப் பருவக் கட்டங்கள்

### வளர்ச்சிக் கட்டத்தில் பிள்ளைகளின் நடிபங்கு

- பெற்றோர்களுக்கும் மூத்தோர்களுக்கும் சிறந்த பிள்ளையாக விளங்குதல்.
- ஆசிரியர்களுக்கு சிறந்ததோர் மாணவனாக இருத்தல்.
- தோழர், தோழியர்களிடையே நல்லதோர் நண்பனாக/ நண்பியாக விளங்குதல்.
- சமூகத்திற்கோர் சிறந்த பிரஜையாக விளங்குதல்.



உரு 1.7
வயோதிபத் தம்பதியினர்

## முதிர்ச்சிக் கட்டம்

- பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்த பின்னர் அல்லது தொழிலுக்காகப் பிரிந்து சென்ற பின்னர் பெற்றோர் தனிமைப்படல்.
- இருவரில் ஒருவர் இறந்த பின்னர் தனிமையான வாழ்க்கைக்கு இசைவாக்கமடைதல்.

> திருமண வாழ்க்கையுடன் தனி மனிதன் ஒருவன் இரண்டு குடும்பங்களின் அங்கத்தவனாகின்றான். தான் பிறந்த குடும்பத்தின் அங்கத்தவனாகவும், தன்னால் உருவாகும் குடும்பத்தின் அங்கத்தவனாகவும் அவன் மாறுகிறான்.

## குடும்ப அங்கத்தவர்களின் பணிகள்

குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பணிகள் பல வகையானவை. பொருளாதார, சமூக, உள, கல்வி மற்றும் ஆன்மீகப் பணிகள் என்பன ஒரு குடும்பத்தால் நிறைவு செய்யப்படல் வேண்டும். ஒரு குடும்பத்தின் பணிகள் அக்குடும்ப அங்கத்தவர்களுக்கு மட்டுமல்லாது மொத்த சமூகத்திற்கும் பல நன்மைகளைப் பெற்றுத் தருவனவாகும்.

**குடும்பப் பணிகள்**

- உளவியல்
- கல்வி
- சமூகப்பணி
- பொருளாதாரப் பணி
- ஆன்மீகப் பணி

## உளவியல் பணிகள்

குடும்பத்தின் மூலம் பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்படுவதால் மனத்திருப்தி ஏற்படும் என்பது இதன் கருத்தாகும்.

- குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கிடையில் அன்பும் அரவணைப்பும் சரியான முறையில் வழங்கப்படலும் வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தலும்.
- குடும்ப அங்கத்தவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கல்.
- அங்கத்தவர்களுக்கிடையே பரஸ்பர தொடர்பினை ஏற்படுத்தல்.
- பரம்பரையைப் பேணல்.
- பாலியல் தொடர்பான தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான உறுதியான அடிப்படை வசதியை ஏற்படுத்தல்.
- குடும்ப அங்கத்தவர்களின் உள நலச் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் இடமாகக் குடும்பம் செயற்படல்.
- குடும்பத்தின் மூலம் குடும்ப அங்கத்தவர்களின் உடல் நலம் பேணல். உ-ம்: குடும்ப அங்கத்தவர் ஒருவர் நோய்வாய்ப்படும்போது முதலில் உதவுபவர்கள் குடும்ப அங்கத்தவர்களாவர்.
- உணவு, உடை, உறையுள், உதவிகள் முதலிய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குக் குடும்பம் உதவுதல்.
- குடும்பப் பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் திருமணம் செய்து வைத்தல்.

குடும்பம் ஒன்றின் மனோ நலன் தொடர்பாகச் சிந்திக்கும்போது தற்காலத்தில் அது மிக முக்கியமாக இருப்பதை உணரலாம். குடும்பத்தில் பெற்றோர்களால் நிறைவேற்றப்படும் பணிகளின் முக்கியத்துவம் பற்றி ''சிரித் மல்தம'' என்னும் நூல் விபரிப்பதை இங்கு குறிப்பிடலாம்.

(1) அன்னை பிதாவைப் போற்றுவோம்
முன்னறி தெய்வம் அவர்களே
எம்மைக் காக்கும் உத்தமர்கள்
வணங்கிப் பணிவோம் பெற்றோரை

(2) துன்பம் பல சுமந்திடுவாள்
இன்பம் பலவும் துறந்திடுவாள்
துன்பம் தாங்கும் வெண்ணிலவாம்
அன்னைக் கீடாம் பொருளுண்டோ

(3) தூணைப் போலத் தாங்கிடுவாள்
உறையும் பாலை ஊட்டிடுவாள்
நிறையத் துன்பம் தாங்கிடினும்
குறையற எம்மை வளர்த்திடுவாள்

(4) இன்ப மொழிகள் பேசிடுவாள்
என்றும் பூப்போல் மலர்ந்திடுவாள்
உடம்பில் எண்ணெய் தடவி எம்மை
உடல் நலம் பேணி வளர்த்திடுவாள்

(5) நன்றாய்ச் சமையல் படைத்திடுவாள்
நன்றாய்க் குளிக்கவும் செய்திடுவாள்
அன்பாய்ச் செல்ல மொழியும் பேசும்
ஈன்ற தாயைப் போற்றிடுவோம்.

**''பெற்றோர் மகிமை''** அறிவுறுத்தல் கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது.

## கல்விப் பணிகள்

கல்விப் பணிகள் என்பது குழந்தைப் பருவம் தொடக்கம் வெளிச் சமூகத்தில் அங்கத்தவராகும் வரையிலான காலம்வரை கல்வி பெறுவதற்காகக் குடும்பம் மூலம் கிடைக்கும் உந்துதலாகும்.

- முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதற்கு முன்னுள்ள காலப் பகுதியில் ஆரம்ப ஆசிரியர்களாக இருப்பவர்கள் குடும்பத்தவர்களாவர். பிள்ளை, சமூகத்துக்குப் பொருத்தமான முறையில் பயிற்றுவிக்கப்படுவது குடும்பத்தினால் ஆகும்.
- கல்வி கற்பதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- குடும்பத்திலும் சமூகத்திலும் பிள்ளைகளுக்குள்ள நடிபங்கை இனங்காண்பதற்கு வழிகாட்டல்.
- சமூகம் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கல்.
- பிள்ளைகளிடையே காணப்படும் வினைத்திறன்களை இனங்கண்டு அவற்றை வளர்ச்சியடையச் செய்தல், படைப்பாற்றலை வளர்த்தல், ஆக்கங்களை ரசிப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு சந்தர்ப்பமளித்தல்.

## சமூகப் பணிகள்

சமூகத்திற்குச் சிறந்ததொரு பிள்ளையை அறிமுகஞ்செய்தல் இந்த நடவடிக்கைகள் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- சமூக இசைவாக்கம் பெறல் - சமூகத்திற்கு ஏற்றவாறு வாழப் பயிற்றுவித்தல்.
- சமூக நலனுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களைப் பேணி வாழ்தலுக்குப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல். அத்துடன் சமூக விரோதமற்ற கருத்துகளை வளர்ச்சியடையச் செய்தல்.
- சமூகத்தின் எதிர்கால முன்னேற்றத்துக்கான செயற்றிறன் படைத்த அலகாக அமைதல்.
- குடும்பத்தினதும் சூழலினதும் சுகநலக் காப்பிற்குப் பங்களிப்புச்செய்தல்.
- குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சியைப் பேண ஒத்துழைப்பு வழங்குதல்.

## பொருளாதாரப் பணிகள்

குடும்பப் பொருளாதாரத்தின் மூலம் உச்சப் பயனைப் பெற வழிப்படுத்தலே இதன் கருத்தாகும்.

- உரிய நேர்மையான முறையில் பணம் ஈட்டுதல்.
- மனித வளங்களையும் மனிதனில் வளங்களையும் உரியவாறு முகாமைத்துவம் செய்தல்.
- பரம்பரை பரம்பரையாக குடும்பச் சொத்துக்களைக் கையளித்தல். விருத்தி செய்தல். இங்கு பெற்றோர்கள் சம்பாதிக்கும் சொத்துக்கள் பிள்ளைகளிடையே அவ்வச் சமூக நியமங்களுக்கேற்ப கையளிக்கப்படும்.
- குடும்பத்துக்குக் கிடைக்கும் வருவாயை உரியவாறு கையாளல் (முதலீடும் சேமிப்பும்).

## ஆன்மீகப் பணிகள்

குடும்ப அங்கத்தவர்களிடையே ஒழுக்கப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழங்கப்படும் பங்களிப்பு என்பது இதன் கருத்தாகும்.

- சமய சம்பிரதாயங்களை கலாசாரப் பண்புகளை ஒரு பரம்பரை இன்னொரு பரம்பரைக்குப் பகிர்ந்தளிப்பதற்கு குடும்ப அமைப்பு உதவுகிறது.
- மூத்தோருக்கு மரியாதை செய்யவும் உபகாரம் செய்யவும் பழகும் ஆரம்பப் பயிற்சி குடும்பத்தினால் ஆற்றப்படுகிறது.

## குடும்ப அங்கத்தவர்களின் கடமைகளும் பொறுப்புகளும்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களும் கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், தார்மீக உரிமைகள் மூலம் ஒருவருக்கொருவர் தொடர்புபட்டுள்ளனர்.

மனிதன் சமூகக் கடமைகளை நிறைவேற்றி தனது உரிமைகளையும் பாதுகாத்துக் கொண்டு வாழ்வானாயின், சண்டைகள் இல்லாத சமாதானத்துடன் கூடிய அழகானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று கௌதம புத்தர் உபதேசித்துள்ளார்.

ஒரு குடும்பத்தின் முன்னேற்றம், ஒற்றுமை, இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளல் என்பன அங்கத்தவர்கள் தமது கடமைகளையும் பொறுப்புகளையும் சரியான முறையில் நிறைவேற்றுவதிலேயே தங்கியுள்ளது.

### ஒரு குடும்பத்தின் கடமைகளையும் பொறுப்புகளையும் பின்வருமாறு குறித்துக் காட்டலாம்.

- கணவன் தனது மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.
- மனைவி தனது கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.
- பெற்றோர் தமது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.
- பிள்ளைகள் தமது பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.
- சகோதர சகோதரிகள் தமக்கிடையே செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.
- குடும்ப அங்கத்தவர்கள் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்.

### கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

1. தனது துணைவியாக ஏற்றுக்கொள்ளல்.
2. இனிமையாகப் பேசுதல்.
3. மதிப்பளித்தல்.
4. இன்பத்திலும் துன்பத்திலும் தனது மனைவியின் பாதுகாவலனாகப் பணிபுரிதல்.
5. மனைவியின் உறவினர்களையும் நண்பர்களையும் சிறந்த முறையில் உபசரித்தல்.
6. மனைவியின் தேவைகளை அறிந்து இயன்றவரை அவற்றை நிறைவேற்றல்.
7. வீட்டு நிர்வாகத்தில் ஒற்றுமையாகப் பணிபுரிதல்.
8. ஏனைய பெண்களுடன் தவறான தொடர்பை ஏற்படுத்தாமை.
9. நற்பண்புமிக்க அன்பான கணவனாதல்.

### மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

1. தனது துணைவராக மதித்தல்.
2. இதமான வார்த்தைகளால் பேசுதல்.
3. மதிப்பளித்தல்.
4. வீட்டுவேலைகளைச் சிறப்பாகச் செய்தலும் சோம்பேறித்தனமின்றி நடத்தலும்.
5. கணவனின் உறவினர்களையும் நண்பர்களையும் சிறப்பாகக் கவனித்தல்.
6. கணவனின் உழைப்பைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்.
7. நல்ல குணநலங்களுடைய விரும்பத்தக்கவராய் இருத்தல்.
8. ஏனைய ஆண்களுடன் தவறான தொடர்பை ஏற்படுத்தாமை.



உரு 1.8

### பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

1. பிள்ளைகளுக்குச் சிறந்த போசணையூட்டல்
2. குற்றச் செயல்களில் இருந்து தவிர்த்தல்
3. சிறந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், ஊக்கமளித்தல்
4. சிறந்த கல்வியறிவை அளித்தல்
5. நிறைந்த ஆளுமையுடைய பிரஜையாக வளர்த்தல்
6. சிறந்த பழக்கங்களையும் நல்ல மனப்பாங்குகளையும் அளித்தல்
7. நோயுற்ற வேளையில் சிறந்த முறையில் கவனித்தல்
8. பொருத்தமான வயதில் சொத்துகளைக் கையளித்தல்
9. உரிய வயதில் திருமணம் செய்து கொடுத்தல்

### பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்

1. பெற்றோரைப் பராமரித்தலும் பாதுகாத்தலும்
2. தமது பரம்பரையைப் பாதுகாத்தல்
3. பெற்றோரின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றல்
4. பெற்றோர்கள் மூலம் கிடைத்த ஆதனங்களைப் பாதுகாத்தலும் பிழையற அனுபவித்தலும்.
5. பெற்றோர்களை மதித்து நடத்தல்
6. குடும்ப அங்கத்தவனாக பொறுப்புணர்ச்சியுடன் நடத்தல்



உரு 1.9

(1) வயதான போதும்
உடல் நலிந்த போதும்
வறுமை கண்ட போதும்
பெற்றோரை வணங்கி வழிபடு

(2) பெற்றோர் சொன்ன வார்த்தை
தேவையாயின் செய்து விடு
அன்பை விட்டு நீங்காதே
நல்லன செய்வாய் சோர்வின்றி

(3) பெற்றோரின் முன்னிலையில்
உயர்ந்த இடத்தில் அமராதே
நிலவைப் போன்ற பெற்றோர்கள்
வணங்கிக் கும்பிடு எப்போதும்.

***பெற்றோரின் மகிமை என்னும் நூலிலிருந்து....***

### சகோதர சகோதரிகளிடையே நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்:

1. மூத்த சகோதர, சகோதரிகள் இளைய சகோதர, சகோதரிகளிடம் அன்பும் கருணையும் செலுத்திப் பாதுகாத்தலும் உதவி செய்தலும்.
2. இளைய சகோதர, சகோதரிகள் மூத்த சகோதர, சகோதரிகளைக் கனம் பண்ணுதலும் பணிவுடன் நடத்தலும்.
3. மூத்த சகோதர, சகோதரிகள் இளைய சகோதர, சகோதரிகளுக்கு முன்மாதிரியாக நடத்தல்.
4. இளையவர் மூத்த சகோதர, சகோதரிகளின் வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் பின்பற்றல்.
5. வீட்டு வேலைகளிலும் கல்வி நடவடிக்கைகளிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கல்.

### குடும்பம் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும்:

1. சமூகத்தில் சந்தோஷமும் சமாதானமும் கெடாமல் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்தல்.
2. சமூக நலனுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களைப் பேணி நடத்தல்.
3. சமூக சேவைப் பணிகளில் செயற்துடிப்புடன் பங்குகொள்ளல் (சிரமதானம், பொதுப்பணிகள்).
4. தனது தொழிலை மிகவும் சிறப்புடனும் நேர்மையுடனும் செய்தல்

சமூகத்தின் மிகச் சிறிய அலகு குடும்பமாகும். குடும்ப ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பேணப்படும் குடும்பங்களினால் கட்டியெழுப்பப்படும் சமூகம் எல்லோராலும் விரும்பப்படும். குடும்பத்தில் சமாதானம் வளர வேண்டுமாயின் குடும்ப அங்கத்தவர்களிடையே கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும் தன்மை காணப்படல் வேண்டும்.

## குடும்பத்திலுள்ள பரஸ்பரத் தொடர்புகள்:

கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் சமூக, உள ஒருமைப்பாட்டுடன் வாழுதல் வேண்டும். வேறுபட்ட சமூகங்களில் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்கள், சட்டதிட்டங்கள் என்பவற்றுக்கு ஏற்பத் திருமண வாழ்க்கையில் இணைபவர்கள் ஒரே மனையில் வாழ்தல் வேண்டும்.

குடும்ப அங்கத்தவர்களின் பரஸ்பரத் தொடர்புகள் பற்றி; ***G.P. மர்டொக்*** என்பவர் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்:

1. கணவன் மனைவிக்கிடையிலான தொடர்பு
2. தாய் தந்தைக்கிடையிலான தொடர்பு
3. தந்தைக்கும் மகளுக்குமிடையிலான தொடர்பு
4. தந்தைக்கும் மகனுக்குமிடையிலான தொடர்பு
5. தாய்க்கும் மகளுக்குமிடையிலான தொடர்பு
6. தாய்க்கும் மகனுக்குமிடையிலான தொடர்பு
7. சகோதரனுக்கும் சகோதரிக்குமிடையிலான தொடர்பு
8. சகோதரிக்கும் சகோதரிக்குமிடையிலான தொடர்பு

அத்துடன் அன்புப் பிணைப்புடன் வாழவும் பொது வாழ்க்கை மிகவும் முக்கியமானது.

இப்பரஸ்பரத் தொடர்புகள்

- தந்தைக்கும் தாய்க்கும்
- பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும்
- பிள்ளைகளுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான,

}

- ஏற்றுக் கொள்ளல்
- மதிப்பளித்தல்
- நம்பிக்கை
- ஒத்துழைப்பு
- பொறுமை
- அன்பு

எனக் குறிப்பிடலாம்.

**குடும்ப அங்கத்தவர்களிடையே காணப்படும் பரஸ்பரத் தொடர்புகள்**

1. உடலியல் ரீதியானவை
2. உள ரீதியானவை என்றவாறு வகைப்படுத்தலாம்.

## உடலியல் ரீதியான தொடர்புகள்

1. ஒத்துழைத்தல்  2. உதவுதல்  3. பகிர்ந்து பங்கிட்டுக்கொள்ளல்

## உள ரீதியான தொடர்புகள்

1. குடும்ப அங்கத்தவர்களைப் பற்றிச் சிந்தித்தலும் அவர்களைப் பற்றி அக்கறையெடுத்தலும்
2. பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உதவி செய்தல்
3. ஏற்றுக்கொள்ளல்
4. மதிப்பளித்தல்
5. பொறுமையுடனிருத்தல்
6. அன்பு செலுத்துதல்
7. கீழ்ப்படிதல்

### செயற்பாடு - 03

தனது குடும்ப அங்கத்தவர்களிடையே பரஸ்பரத் தொடர்புகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைக் காட்டும் நாடகம் ஒன்றை வகுப்பறையினுள் அரங்கேற்றவும். வகுப்பு மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து உதவி செய்தல், உபகாரம் செய்தல், கட்டுப்படுதல், பங்கிட்டுக் கொள்ளல், மதிப்பளித்தல், ஏற்றுக் கொள்ளல், பொறுமையாக இருத்தல் பற்றி எடுத்துக் காட்டும் வகையில் நடிப்பை மேற்கொள்ளவும். தாய், தந்தை, பிள்ளைகள், பாட்டி, பாட்டன் என்றவாறு பாத்திரங்களைப் பிரித்துக்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| • **ஒத்துழைத்தல்** | காலை வேளையில் வேலைப்பழு அதிகமான சந்தர்ப்பம் ஒன்றில் வீட்டு வேலைகளில் ஒத்துழைக்கும் முறையை நாடகம் ஒன்றின் மூலம் நடித்துக் காட்டல். |
| • **உதவுதல்** | கல்வி நடவடிக்கைகளின்போது மூத்த சகோதர, சகோதரிகள் இளையவர்களுக்கு உதவுதலை நடித்தல். |
| • **கட்டுப்படல்** | பெற்றோர்களின் கருத்துகளுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் காட்சி ஒன்றை நடித்துக் காட்டல். |
| • **பங்கிட்டுக்கொள்ளல்** | சாப்பிடும்போதும், படம் ஒன்றை வரையும் வேளையிலும் புத்தகங்களைக் கையாளும் வேளையிலும் எவ்வாறு ஏனையோருடன் பங்கிட்டுக்கொண்டு நடக்க வேண்டும் என்பதை நடித்துக் காட்டல். |
| • **மதிப்பளித்தல்** | பெற்றோர்களுக்கும் பெரியோருக்கும் எவ்வாறு மதிப்பளிக்கலாம் என்பதை நடித்தல். |
| • **பொறுமை** | ஒரு சிறு பிள்ளை ஏதாவது கேட்டு அழும் வேளையில் அதற்கேற்றவாறு நடந்து கொள்ளும் முறையை நடிப்பின் மூலம் காட்டல். |
| • **அன்பு** | பெற்றோர்களும் பிள்ளைகளும் பரஸ்பர அன்பைப் பரிமாறிக்கொள்ளும் காட்சியை நடித்தல். |

### இப்போது நீங்கள்,

- உங்கள் குடும்பம் பற்றிய விளக்கம் ஒன்றைப் பெற்றிருப்பீர்கள்.
- குடும்ப அங்கத்தவர்களின் பணிகள் பற்றி உணர்ந்திருப்பீர்கள்.
- குடும்ப அங்கத்தவர்களின் கடமைகளும் பொறுப்புகளும்பற்றி சிறந்ததோர் மனப்பாங்கைப் பெற்றிருப்பீர்கள்.
- குடும்பத்தினரிடையே உள்ள பரஸ்பரத் தொடர்பை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி விளங்கி இருப்பீர்கள்.
- சிறந்த விரும்பத்தகு மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வை ஏற்படுத்தத் தேவையான விடயங்கள் பற்றி அறிந்திருப்பீர்கள்.